**பூஜாபிடிய பிரதேச சபையின் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பூஜாபிடிய பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் பூஜாபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv)ஆம்பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டில், என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களினுள்உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் மொத்த நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 365,195 குறைத்தும் மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 2,809,386 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | 2022 ஆண்டு ஜர்னல் குறிப்பு மூலம் சரிசெய்வதென. | நிலையான வைப்பு வட்டியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 3,334,733 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு ஜர்னல் குறிப்பு மூலம் சரிசெய்வதென. | நிலையான வைப்பு மீதியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான வேவல கொஸ்கொள்ள கெதரகாவ கும்புற எனும் காணியின் பெறுமதி 02 சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 1,584,832 ஆக ரூபா 1,338,512 ஆக கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | நிலையான சொத்து பதிவேட்டில் குறித்த பக்கங்களில் சரியாக பதிவதென. | காணிகளின் சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 02 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் அட்டவணைகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 566,085 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | 2022 ஆண்டு கணக்கு மூலம் சரிசெய்வதென. | வித்தியாசத்தை இனங்கண்டு சரியான பெறுமதிகளை கணக்குகளில் செம்மையாக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குதேவையான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ஐந்தொகையில் காட்டியிருந்த ரூபா 22,139,186 ஆன 05 சொத்து விடயங்கள் இறுப்பு பதிவேடு, கணிப்பீட்டறிக்கை மற்றும் அட்டவணைகள் சமர்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | சரியாக அட்டவணைகளை தயாரித்து சபை அங்கீகாரத்தின் மீது நிதிக்கூற்றுக்களை சரிசெய்வதென. | கணக்கு மீதிகளுக்கான சரியான சான்றுகளை பேணிச் செல்ல வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 16,337,527 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 17,490,730ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் நிலுவை வீதவரி வருமானம்ரூபா 3,682,088 அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் அலகொன்றின் நிலுவை ரூபா 5,000 இலும் விஞ்சிய 92நுகர்வோர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 911,623 தொகையும்,அலகொன்றின் நிலுவை ரூபா 1,000 இலும் விஞ்சிய குத்தகைதாரர்களின் | மொத்த நிலுவை வீதவரியை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதால், நிலுவை குறைந்துள்ளதுடன், அரச நிறுவனங்களின் நிலுவையை அறவிட குறித்த தரப்பினரை | நிலுவைவீதவரியை அறவிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெயர் குறிப்பிடாத195 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 520,086 தொகை மற்றும் 05 அரச நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 126,178 ஆன மீதியொன்றும் உள்ளடங்கியிருந்தன. | அறவூட்டியுள்ளதென. | |

**(ஆ) கடையறை வாடகை**

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான அம்பதென்ன வியாபார கட்டிடத் தொகுதியின் கடையறைகளிலிருந்து 2015 மார்ச் மாதம் மீள்மதிப்பிட்ட கடை வாடகை அறவிடப்படாததால், 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை சபைக்கு ரூபா 2,100,600 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டை செயற்படுத்த முடியாது போனதென. | புதிய மதிப்பீட்டின் மீது கடை வாடகை அறவிட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

**விளம்பர அறிவித்தல் பலகை கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அறிவித்தல் பலகை கணிப்பீடொன்று செய்யப்பட்டிருக்காததுடன், ஆண்டிறுதியில் அறவிட வேண்டிய ரூபா 381,200 கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டில் அறிவித்தல் பலகை கணிப்பீடொன்றை மேற்கொண்டு அறவிட நடவடிக்கை எடுப்பதென. | அறிவித்தல் பலகை கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள், சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது பாலர் பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்ய எதிர்பார்த்த காணிக்காக அரச பிரதான மதிப்பீட்டாளர் வழங்கிய ரூபா 225,000 ஆன மதிப்பீட்டை கவனிக்காது தனியார் மதிப்பீடொன்றின் மீது ரூபா 3,000,000 தொகை செலுத்தி காணியொன்றை கொள்வனவு செய்திருந்ததால், அரச மதிப்பீட்டை விஞ்சி ரூபா 2,775,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய ரூபா 225,000 மதிப்பீட்டிற்கு காணி உரிமையாளர்கள் உடன்படாததால், தனியார் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டை பெற்றுக் கொண்டதுடன், அதன் பிரகாரம்,ரூபா 3,000,000 இற்கு ஆளுனரின் அங்கீகாரத்துடன் காணியை கொள்வனவு செய்ததென. | கொள்வனவை சரியான அங்கீகாரம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் பூரணமான பின்னர் சரியாக மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **சபை அதிகார எல்லையில் காணி ஏலவிற்பனை செய்தல்** | | |
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 154 பிரிவு பிரகாரம், 2002 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை அதிகார பிரதேசத்தில் 03 காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்கையில்,அறவிட வேண்டிய 01 சதவீத வரித் தொகையை அறவிட்டிருக்காததுடன், பொது நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ள வேண்டிய காணி அளவையும், பெற்றிருக்கவில்லை. | நினைவூட்டல் கடிதம், தகவல்களை அறியும் கடிதம் அனுப்பியுள்ளதென. | பிரதேச சபை சட்டம் பிரகாரம் காணி துண்டு பெறல் மற்றும் வரித் தொகை அறவிட வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பராதீனம் செய்வதற்காக பயன்பாட்டிலிருந்து அகற்றிய சபைக்கு சொந்தமான ரூபா 10,622,462 ஆன ஒரு டெக்டர் மற்றும் கல் ரோலொன்றை பராதீனம் செய்யாது 2015 ஆணடிலிருந்தும், திருத்துவதற்காக பயன்பாட்டிலிருந்து அகற்றிய ரூபா 3,297,282 ஆன கெப் வண்டியொன்று மற்றும் மோடார் சைக்கிலொன்றையும் திருத்தம் செய்யாது 2019 ஆண்டிலிருந்தும் விளைவற்று காணப்பட்டன. | விளைவற்ற வாகனங்கள் தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்க உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. கணிப்பீட்டு சபையொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென. | வாகனங்களை பயன்படுத்தாது வைக்காமல் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| குப்பை முகாமைத்துவத்திற்காக உத்தேச எனசல்மட காணியை அளக்க மற்றும் சுவீகரிக்கும் கட்டணமாக ரூபா 400,000 தொகையை காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு 2013 ஆண்டு கொடுப்பனவு செய்திருந்த போதும், கணக்காய்வு திகதியன்றும் அக்காணியை சுவீகரித்து குப்பை முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்படுத்தியிருக்கவில்லை. | குறித்த காணியின் அளவை பத்திரம் மற்றும் கள குறிப்பை பெற்றுக் கொள்ள எழுத்து மூலம் கோரியுள்ளதென. | காணியை சுவீகரித்து நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். |